# 5.1 மதசார்பற்றவாதம் (Secularism)



## மதசார்பற்ற வாதம் - Secularism

### அறிமுகம்

1. மதசார்பின்மை என்ற சொல் “சமயச் சார்பு இல்லாத இவ்வுலக வாழ்க்கையிலுள்ள பிற விசயங்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்

2. அரசியல் கண்ணோட்டத்தில் நோக்கும் போது ஒரு குறிப்பிட்ட சமயக் கருத்துக்களுக்கு இடம் கொடாத சமயக் கருத்துக்களினால் பாதிக்கப்படாத ஒரு சமய சார்பற்ற அரசைக் குறிக்கும்

3. ஒரு மத சார்பற்ற அரசானது ஏதாவது ஒரு மதக் கொள்கையைப் பின்பற்றி அதன் வழி நடக்கும் மதச் சார்புள்ள ஒரு நாட்டின் மறு மாற்றமாகத் திகழ்கின்றது

4. மதச்சார்புள்ள ஒரு நாட்டில் சமயத்தால் சிறுபான்மையோரது நலன்களுக்கு தீமை பயக்கும் வகையில் பெரும்பான்மை சமய அரசு செயற்பட வழிவகுக்கும்

5. ஆனால் மதச்சார்பின்மை என்பது அரசை சமயத்திடம் இருந்து வித்தியாசப்படுத்தி ஒருவரின் மதம் சம்மந்தமான விடயங்களில் மற்றவர்களின் தலையீட்டை தவிர்க்க விழையும் ஒரு முற்போக்கு கருத்தாகும்

6. மதச் சார்பற்ற நாடுகளில்தான் சமய வழிபாட்டில் சுயாதீனம், நாணயம், நம்பிக்கை, சுதந்திரங்கள் எல்லோருக்கும் கிடைக்கின்றன

7. அதிகமான சமயப் பிரிவினர்கள் காணப்படும் ஒரு நாட்டில் இம்மத சார்பின்மைப் பண்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது

தொகுப்பு :- திருமதி.ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தோற்றம்

1. இக்கருத்தியலானது ஐரோப்பாவில் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றது

2. ஐரோப்பிய ஞானிகளின் (Enlightement) சிந்தனையின் ஒரு பகுதியாகும்

3. இதனால் மத சார்பின்மைவாதமானது பழமை தாராண்மை வாதத்தோடும் சமவுடைமைவாத சிந்தனையுடனும் தொடர்புபட்டது

4. ஐரோப்பிய மதசார்பின்மை வாதம் மத்திய காலத்தின் இறுதிக்காலத்தில் பிரதான அங்கமாக அரசு மற்றும் திருச்சபைகளுக்கிடையில் காணப்பட்ட நிறுவன இணைப்பின் மீது அரசாட்சியின் காவலனாக திருச்சபை இருந்தமைக்கு எதிராக வளர்ச்சியுற்றது

5. அரசாட்சி + திருச்சபை = தூய்மையற்ற கூட்டு

6. அரசாட்சி முறைமைக்கு எதிரான இயக்கங்கள் அரசு மற்றும் திருச்சபைகளுக்கிடையில் காணப்பட்ட இந்த "தூய்மையற்ற கூட்டிற்கு" எதிரானதன் மூலம் அந்த போராட்டத்தின் தத்துவார்த்த வெளிப்பாடான விளைவாக தோன்றியதே மதசார்பின்மை வாதமாகும்

7. திருச்சபை முன்னெடுத்த அஞ்ஞான ரீதியான ஆதிக்கத்திற்கு எதிராக ஐரோப்பிய மறுமலர்ச்சி யுகத்தில் தோன்றிய தர்க்க அறிவுக்கு முதலிடம் கொடுத்தால் மத சார்பின்மைவாதம் தோன்றியது

8. தாராண்மைவாதம் மத சார்பின்மையில் தனியாள் சுதந்திரம் சிந்தனை மற்றும் மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம் ஆகிய மூல தத்துவங்களை ஈர்த்துக் கொண்டதோடு சமவுடைமைவாதம் சமூக அழுத்தத்தின் நிறுவனமாக மத ஆதிபத்தியத்திற்கு எதிராக புரட்சி செய்தலை ஏற்றுக்கொண்டது




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தாராண்மைவாத மதசார்பின்மையின் அடிப்படைகள்

திருச்சபையையும் அரசையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்துவது" (Separation of hurchand the

**1**

"அரசு மற்றும் திருச்சபை ஆகியவற்றை நிறுவன ரீதியாக வேறாக்குதல்

அரசின் தன்மை அரசின் கொள்கை என்பவற்றைத் தீர்மானிப்பதில் சமயம் தலையிடக்கூடாது. சமய விடயங்களில் அரசு தலை-லயிடக்கூடாது

**2**

அரசு சமயத்துடன் அந்நியோன்யமாக இருக்கக் கூடாது. சமயக் கற்கைக்கும் பிரச்சாரத்திற்கும் அரசு தொடர்புபடாதிருத்தல்

**3**

அரசு எந்தவொரு சமயத்திற்கும் பக்க சார்பாக இருக்க கூடாது சமயம் மனிதர்களின் தனிப்பட்ட விடயமாவதோடு அது அரசியலுக்குள் கொண்டு வரவேண்டியதில்லை

**4**

சமய சுதந்திரம் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளில் ஒன்று அரசின் அடிப்படை ஆக்க முடியாது. மதத்தை புறக்கணிக்க வேண்டும் என்பது அர்த்தமில்லை எந்தவொரு பிரஜைக்கும் சமயத்தின் பெயரால் பாகுபாடு காட்டக்கூடாது என்பதாகும்

தொகுப்பு :- திருமதி.ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

தரம் - 12, 13

## சமவுடமைவாத மதசார்பின்மையின் அடிப்படைகள்

சமயம் சமூகத்தை துன்பத்திற்குள்ளாக்குவது உலகம் பற்றிய தவறான விளக்கம் ஒன்றினை துன்பத்திற்குள்ளான மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் கருத்து தொகுதி

**1**

சமவுடமைவாத அரசு முழுமையாக சமயத்திலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும். மதமானது அரசின் அனுமதியுடனே நிலவ முடியும்

**2**

சமயம் சார், அரசியல்சார் நிறுவனங்களுக்கு சமவுடமைவாத முறையினுள் இருப்புக் கிடையாது

**3**

மாக்சிஸ வாத முறைமையினுள் சமவுடமைவாத அரசிற்கு அச்சுறுத்தல் இல்லாத வரையில் மட்டுமே சமய நிறுவனங்களுக்கு இடமுண்டு. அவ்வாறெனில் அரசின் தீவிர மேற்பார்வை அதிகரித்து நீக்கப்படும்

**4**

சமய அடையாளங்களுடன் அரசியல், சிவில் சமூக இயக்கங்கள் மத அழுத்தக் குழுக்களுக்கு வாய்ப்பு இல்லை

தொகுப்பு :- திருமதி.ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இந்திய மதசார்பின்மைவாதத்தின் பிரதான பண்புகள்

தாராண்மைவாத சிந்தணையின் அடிப்படையில் இந்திய மதசார்பின்மைவாதம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது

**01** இரு முக்கிய பண்புகள் காணப்படுதல்

1. அறநெறி சார்பின்மை
2. சர்வ அறநெறிகளினதும் சேர்க்கை

**02** தனிநபர்களின் சமய அடையாளங்களை கவனத்தில் கொள்ளாது அரசானது சகல பிரஜைகளையும் ஒரே சமமாக மதித்தல்

**03** பிரஜைகளின் உரிமைகளை பெற்றுக்கொள்ளும்போது எந்தவொரு பிரஜைக்கும் தனது சமய அடையாளங்கள் தடையாக இருக்க மாட்டாது

**04** மதசார்பின்மைக் கோட்பாடு சகோதரத்துவ கோட்பாடுடன் நெருங்கிய பண்பை கொண்டிருக்க ஆக்கப்பட்டது

இந்திய அரசியல் யாப்பின் 42வது திருத்தம் அரசியல் அமைப்பின் முன்னுரையில் புதிய கோட்பாடாக "மதசார்பின்மை" என்ற சொற்றொடர் புகுத்தப்பட்டுள்ளது


தொகுப்பு :- திருமதி.ஜ.பிரமாலட்சுமி, ஆசிரியர் - (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மதசார்பின்மையும் அரசியலும்

1

அரசு மற்றும் சமயங்களுகிடையிலான தொடர்பு, அரச கொள்கை மற்றும் பிரஜைகளின் உரிமைகளை மதசார்பின்றி நிர்ணயிப்பதற்கு மதசார்பின்மை கொள்கை பயன்படுத்தப்படுகின்றது

2

அரசியலில் மதம் தொடர்பு படாதிருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல

3

மதசார்பின்மை காணப்படும் நாடுகளில் மதவாத அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் காணப்படுகின்றது. உதாரணமாக இந்தியாவைக் குறிப்பிடலாம்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மதசார்பின்மையின் தற்கால முக்கியத்துவம் பெற காரணம்

1. சமய அடிப்படை வாதத்தை துணையாக கொண்ட மதம் சார் அரசுகள் (Theocratise State)

2. பன்மைக் கலாசாரவாதத்தினை மையப்படுத்தி சமய அடையாளங்களை உடைய சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்



## வினாக்கள்

**1. அரசியல் கருத்தியலில் மதசார்பின்மை வாதத்தின் முக்கியத்துவத்தை விளக்குக**

**2. தற்காலத்தில் மதசார்பின்மை வாதத்தின் அவசியத்தினை அரசியல் கருத்தியலினூடாக அராய்க**

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk